## DEPOSITION OF WITNESS
*(Chapter XXIII Code of Criminal Procedure)*

## IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, TENKASI.

## SC.No.37 /2024

| | | | |
|---|---|---|---|
| அ.சா. | : 18 | நாள் | : 24.10.2024 |
| பெயர் | : மருதப்ப பாண்டியன் | தொழில் | : |
| தந்தை பெயர்/ | : | சமயம் | : |
| கிராமம் | : | வயது | : |
| தாலூகா | : | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 24th day of October 2024.

**எதிரி ஆஜர் .**

முதல் விசாரணை

நான் தற்போது தென்காசி முதன்மை மாவட்ட நீதின்றத்தில் செண்ட்ரல் நாசராக பணிபுரிந்து 31.07.2024 ல் பணி நிறைவு பெற்றிருக்கிறேன். இதற்கு முன்பு சிவகிரி நீதிமன்ற நடுவர் நீதித்துறையில் தலைமை எழுத்தராக பணிபுரிந்து வந்தேன். சிவகிரி நீதித்துறை நடுவர் அவர்களின் உத்தரவுக்கிணங்க 20.09.2019 ம் தேதி சிவகிரி காவல் நிலைய கு.எண்.393/2019 U/S.174 Crpc @ 302, 201 IPC வழக்கில் சம்பந்தப்பட்ட படிவம் 91 ல் பட்டியலிடப்பட்ட சொத்தினை சரிபார்த்து மேற்படி சொத்திற்கு பி.ஆர் நம்பர் 301/2019 என வழங்கியுள்ளேன். காவல் ஆய்வாளர் அனுப்பிய படிவம் 91 அ.சா.ஆ,.12 ஆகும். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் கு.வி.**

20.09.2019 அன்று படிவம் 91 நீதிமன்றத்தில் பெறப்படவில்லை. 12.09.2019 ம் தேதி விசாரணை அலுவலர் நீதிமன்றத்தில் படிவம் 91 ஐ சமர்பித்து திரும்ப பெற்றுள்ளார். அது மீண்டும் 19.09.2019 அன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்றால்

சரிதான். படிவம் 91 ல் காணப்பட்ட சொத்தில் நீளம் , அகலம் ஆகியவை திருத்தப்பட்ட நிலையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அத்தாட்சி காலம் எண் 6 ல் படிவம் 91ல் திருத்தப்பட்டதுபோலவே சொத்தின் நீளம், அகலம் திருத்தப்பட்ட நிலையில் காணப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

**மறுவிசாரணை-இல்லை.**